**தலைப்பு 257 – களுத்துறை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 257 – களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட இந்த அறிக்கையின் 1.6.1 (அ) பந்தியின் பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**நிதியல்லா சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 09 நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி, 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் (SA 82) அந்த சொத்துக்களின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத்தொகையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 260,038,390 தேறிய இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | SA 82 அறிக்கையின் பிரகாரம் ஆரம்ப மீதிக்கும் ஆண்டில் வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்களில் பிழையான பெறுமதியாக இருந்ததுடன் இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் போது அந்த தவறை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மைகளுக்காக இணக்கக் கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன் இணக்கமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையின் (SA 82) பிரகாரம் மற்றும் மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்களின் பட்டோலையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் ஆரம்ப மீதி, ஆரம்ப மீதிக்கான சீராக்கம், கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல்களின் இறுதி மீதிகளுக்கிடையில் முறையில் கூட்டு மொத்தமாக ரூபா 3,504,000 தொகை, ரூபா 59,000,000 தொகை, ரூபா 8,474,258 மற்றும் ரூபா 234,447,532 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த சீராக்கங்கள் SA 82 அறிக்கையின் சரியானதாக கருதி சீராக்கப்பட்டதுடன் சமப்படுத்துவதற்காக இருந்த போதிலும் SA 82 அறிக்கை சரிசெய்யப்படாமையினால் இந்த சீராக்கம் பிழையாக இருந்தது. இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தில் வாய்மூலம் கிடைக்கப் பெற்ற ஆலோசனையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் போது மாற்றல் பத்திரம் மூலம் அரச கணக்குகள் திணைக்களம் ஊடாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மைகளுக்காக இணக்கக் கூற்றுக்கள் தயாரித்து சமர்பிக்க வேண்டியிருந்ததுடன் இணக்கமின்மைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104(4) | அரசாங்கத்தின் சொத்துகளுக்கு ஏற்படுகின்ற நட்டம் அல்லது இழப்புக்கள் தொடர்பாக நட்ட இழப்பு ஏற்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் பூரண அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க | இறுதிப் பரிசோதனை அறிக்கை விரைவாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்திற்குரிய மூன்று (03) வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பான அறிக்கை இந்த அறிக்கை திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2019 மே 31 ஆம் திகதியில் இலக்கம் 14/2019 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | மில்லனிய மத்துகம பேருவளை தொடங்கொட மற்றும் மதுராவல என்ற 05 பிரதேச செயலகங்களில் 261 ஓய்வூதிய கோவைகள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 மே 30 ஆம் திகதியில் இலக்கம் 02/2019 என்ற அரச நிர்வாக சுற்றிக்கையின் 06 ஆம் பந்தி | மரணமடைந்த ஓய்வூதியதாரரின் தகவல்கள் காலரீதியில் பெற்று ஓய்வூதியம் பெறுபவர்களின் பெயர் பட்டியல் நாளது வரையாக்காமையின் அடிப்படையில் மத்துகம, பேருவளை, தொடங்கொட மற்றும் புளத்சிங்கள என்ற பிரதேச செயலகங்களில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மரணமடைந்த 18 ஓய்வூதியதாரர்களுக்காக முறையற்ற வகையில் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட மேலும் அறவிடவேண்டிய ரூபா 613,072 தொகை காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதியில் இலக்கம் 09/2009 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை IV உப பந்தி மற்றும் இலக்கம் 02/2021 (VIII) என்ற 2023 மே 12 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கையில் 02 ஆம் பந்தி | கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்கை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உத்தியோகத்திரின் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் போன்ற படிகள் செலுத்த வேண்டியிருந்த போதிலும் பேருவளை பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாள இயந்திரம் தமது வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படாமல் அந்த கால எல்லைக்காக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 06 பொது வைப்புக் கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 205,871,887 மீதி காணப்பட்டதுடன் அதனிடையே 05 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய இரண்டு வருடங்களை மிஞ்சிய தீர்த்து வைக்கப்படாத கூட்டு மொத்தமான ரூபா 47,692,035 வைப்பு மீதியொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறு அந்த மீதியில் ரூபா 2,989,956 கூட்டுத்தொகையான 05 வருடங்களை மிஞ்சிய மீதியாகவும் காணப்பட்டது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(3) இன் ஏற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பொது வைப்புக் கணக்கில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டு காணப்படுகின்ற கட்டுநிதியில்லாமையால் செலுத்த முடியாதிருந்த வைப்புக்கள் இந்த ஆண்டில் கட்டுநிதி கிடைத்த உடன் செலுத்துவதற்கும், தீர்த்து வைக்கப்படாத வைப்புக்களை இந்த ஆண்டில் தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காலாவதியான வைப்பு மீதிகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு அல்லது நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய இலக்கம் 01/2014 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றிக்கையின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய விரிவான தகவல்கள் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய இலக்கம் 01/2014 என்ற மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் விரிவான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கும் அங்கீகரிக்குமாறும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு குறிப்பிட்டு கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்திலிருந்து தேசிய உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உணவு பதனிடும் இயந்திரம் மற்றும் பொருட்களை துண்டுகளாக்கும் இயந்திரம் மில்லனிய பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருந்த போதிலும் அந்த இயந்திரங்களின் பெறுமதியை உறுதிப்படுத்துகின்ற கடிதம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. எனினும் அந்த இயந்திரம் ஸ்தாபிப்பதற்காக கிராம சக்தி மக்கள் முயற்சியின் கீழ் கிடைத்த ரூபா 1,000,000 நிதியேற்பாடு செலவிடப்பட்டு | இந்த இயந்திரம் 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் இதை அமைப்பதற்கு கட்டிடம் ஒன்று காணப்படாமையினால் பிரதான பிரச்சினையாக இருந்தது. இந்த உபகரணத்தை நிலையத்திற்கு கொண்டு சென்று உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு கட்டிட நிர்மாணம் தேவையாக இருந்தமையால் ரூபா 1,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அந்த தொகை கட்டிடம் நிர்மாணிப்பதற்காக போதியளவில் இல்லாமையின் காரணமாக | சரியான சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆம் ஆண்டின்போது கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதுடன் அந்த 02 இயந்திரங்களையும் ஸ்தாபிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட அந்த கட்டிடத்திற்கு மின்சார இணைப்பு பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது இருந்தமையால் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இந்த 02 இயந்திரங்களும் விளைவற்று காணப்பட்டது. | கட்டிடம் நிர்மானித்து கூரை தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்போது இயந்திரத்தை பாதுகாக்கும் முதலாவது நோக்கமாக இருந்தமையால் மின்சாரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் கட்டிடத்தின் மிகுதி வேலைகளின் இரண்டாவது கட்டமாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்ததின் கீழ் பாலிந்த நுவர பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 250,000 நிதியேற்பாட்டின் அடிப்படையில் மகுர பரக்கெட்டிவல கிராமத்தில் சமூக நீர் செயல்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 244,550 செலவிடப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களுக்கும் அதிக காலமாக உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டம் நிறைவேற்றப்படாமல் பயனற்று காணப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் எந்தவொரு பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. எனினும் அந்த செயற்திட்டம் தொடர்பான களப் பரிசோதனையின் போது கொள்வனவு செய்யப்பட்ட குழாய்கள் அல்லாமல் வேறு | பதிலளிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்தவரிடம் விடயங்களை விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவுகளில் குழாய்கள் சமூக அடிப்படை அமைப்புக்களில் முன்னால் செயலாளரின் வீட்டில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தது. | | |
| (இ) | கித்துல் கைத்தொழில் நிலைபேறாக அபிவிருத்தி செய்யும் நோக்கில் கித்துல் உற்பத்தி விற்பனை செய்வதற்காக நீதியல்வள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சின் “கித்துல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2018” நிதியேற்பாட்டின் மூலம் ரூபா 500,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட விற்பனை நிலையம் 2020 செப்டெம்பர் 02 ஆம் திகதி முதல் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் பாலிந்தநுவர பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த கித்துல் விற்பனை நிலையம் 02 வருடங்கள் அளவிலான காலம் முதல் மூடப்பட்டிருந்தமையால் தற்போதும் எந்தவொரு விற்பனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது அது பயனற்று காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்தவரிடம் விடயங்களை விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் களுத்துறை மாவட்டத்திற்காக இயற்கை உணவகம் மதுகம பிரதேச செயலகப் பிரிவில் மத்துகம சமூக அடிப்படை வங்கிக்கு அடுத்தாலுள்ள காணியில் ரூபா 4,493,830 செலவினமொன்றை செய்து நிர்மாணிக்கப்பட்டு 2023 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி வேலை பூர்த்தி | நீர் மற்றும் மலசலகூட வசதிகள் இன்மையின் காரணமாக இந்த உணவகத்தை திறப்பதற்கு முடியாதிருந்ததுடன் தேவையான பிரதான விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இந்த உணவகத்தை திறந்து வைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் பிரயோக ரீதியல் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட போது அந்த கட்டிடம் உரிய சாத்தியவல ஆய்வு என்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக கணக்காய்வு திகதியான 2023 யூலை 27 ஆம் திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டன. இயற்கை உணவகம் மற்றும் விற்பனை நிலையத்தினை நிர்மாணிக்கின்ற காணி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையளிக்க முடியுமான காணியாக இருந்ததாக சமுர்த்தி அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்ட போதிலும் மத்துகமையில் நிர்மாணிக்கப்பட்ட இயற்கை உணவகம் அமைந்துள்ள காணி மத்துகம பிரதேச செயலகத்திற்கு உரியதாகும். நீர் மற்றும் மலசலகூட வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையின் காரணமாக இயற்கை உணவகத்தை திறப்பதற்கு முடியாதிருந்தது. | | |

**3.3 உள்நாட்டு நிதியம் பயன்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 4,788,488 செலவில் மெல்லனிய பிரதேச செயலகப் பிரிவில் கொடுகொல சார்ந்த பெறுமதி சேர் உற்பத்தியை தோற்று விக்கும் நிலைய கட்டடத்தை அபிவிருத்தி செய்யும் போது 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 கிராம சக்தி நிதியேற்பாட்டின் கீழ் நிர்மானிக்கப்பட்டு முன்னர் | பதிலளிக்கப்பட வில்லை. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததுட ன் காணப்படுகின்ற குறைபாடுகளை |

காணப்பட்ட கட்டடத்தில் ரூபா 291,237 செலவினம் ஒன்றில் நிர்மானிக்கபட்ட கூரை கலற்றி அகற்றப்பட்டிருந்த போது அதனை கலற்றி அகற்றப்பட்ட கட்டிட பொருட்கள் எதுவும் சௌபாக்கிய சங்கத்திற்கோ அல்லது பிரதேச செயலகத்திற்கோ முறையான வகையில் கையளிக்கப்ட்டிருக்கவில்லை. காணப்பட்ட கூரையை கலற்றி அகற்றப்பட்ட கட்டிட பொருட்கள் அங்குமிங்கும் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட முதலாவது மாடிக்கான படிக்கட்டுகள் நிர்மானிக்காமையினால் அது மற்றும் தொடர்புடைய செங்கல் சுவர் மற்றும் தூண்கள் (columns) மழைக்கு உட்பட்டிருந்ததன் காரணமாக அதன் பின்னாலுள்ள யன்னலில் நீர் உட்புகுந்து கசிவு ஏற்பட்டிருந்தது. கட்டிடத்தின் முதலாவது மாடியை நிர்மாணிக்காமல் எஞ்சியிருந்த தூண்களின் (columns) கம்பி மற்றும் படிக்கட்டுகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கம்பி சுற்றாடலில் வெளியில் தெரிந்தமையினால் துருப்பிடித்து காணப்பட்டது. அந்தக் கட்டடத்தின் விராந்தையில் கூரை நிர்மானிக்காமையின் காரணமாக விராந்யையில் நிர்மாணிக்கப்பட்ட 09 அடி உயரமான 03 தூண்கள் மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த (rendering) தரையில் சீமந்து என்பன வெயில் - மழைக்கு திறந்த நிலையில் காணப்பட்டது. ஆரம்பமாக மதிப்பீடு செய்யப்பட்ட வல்லாரை சார்நத பெறுமதி சேர்த்தல் உற்பத்தியை தயாரிக்கும் போது கட்டாயமாக அந்த மூலப்பொருட்கள் (வல்லாரை) கழுவி சுத்தப்படுத்துவதற்காக தேவையான கழுவும் பாத்திரம் (சிங்க்) பொருத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வல்லாரை சார்ந்த பெறுமதி சேர் உற்பத்தியை வளர்க்கும் செயற்த்திட்டத்தின் பிரதான நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அந்த உற்பத்திக்காக தரச் சான்றுதழ் பெற

பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்ததுடன் அந்த தரச் சான்றதழ் பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான (சிறந்த) உற்பத்தி செயற்பாடுகளை (Good Manufacturing Practice) ஏற்படுத்துவற்காக அத்தியவசிய குறிகாட்டிகளை அடைந்து அந்த ஒப்பந்தத்தில் வேலை அடைந்து கொள்ளாமையால் அந்த ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் 05 பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசேதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மில்லனிய பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 8,723,174 செலவில் அமுல்படுத்தப்பட்டிருந்த வல்லாரை சார்ந்த உற்பத்திகளுக்கான பெறுமதிசேர் செயற்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது தேசிய உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேசகங்களுக்கு கிடைத்திருந்த எனினும் 05 வருட காலமாக பயன்படுத்தப்படாதிருந்த பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத உணவு தயாரிக்கும் இயந்திரம் மற்றும் பொருட்களை கூறுகளாக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் உற்பத்திக்காக தரச்சான்றுகள் பெற்றுக் கொள்ளல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய பௌதீக தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் அந்த தரச் சான்றுதழ் பெற்றுக் கொள்ள முடியாமையின் காரணமாக உற்பத்திகள் வெளிநாட்டு சந்தைகளைப் போன்று உள்நாட்டு சந்தைகளுக்கும் | பதிலளிக்கப்பட வில்லை. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு முடியாதிருந்தது. இந்த சான்றுதழ் எதிர் காலத்திலேனும் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான உற்பத்திக்கூட சூழல் ஒன்று இதில் அவதானிக்கப்படவில்லை. இந்த வல்லாரை சார்ந்த பெறுமதிசேர் உற்பத்திச் செயற்திட்டத்தின் உற்பத்தியில் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட வல்லாரை சார்ந்த பெறுமதி சேர் உற்பத்தி செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்ற முடியாதிருந்தது. | | |
| (ii) | சௌபாக்கிய செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,778,000 கிரயத்தில் தொடங்கொட பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பத்திக் சார்ந்த நிர்மானங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் பத்திக் கைத்தொழிலுக்காக தேவையான மண்ணெண்ணெய் அடுப்பு, கத்திரி போன்ற ஆரம்ப உற்பத்தி உபகரணங்களும் நலனாளிகளுக்கு வழங்கவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உபகரணங்களை வழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் பத்திக் தொழிலின் கைத்தொழில் இறுதி பூர்த்திகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக இறுதிக் கட்டத்தின் போது பயன்படுத்த வேண்டிய அத்திவசியமான உபகரணமொன்று இல்லாமல் 05 நூல் ஓவர்லொக் மெஷின் 20 கொள்வனவு செய்யப்பட்டு நலநாளிகளுக்கு வழங்குவதற்காக மாத்திரம் ரூபா 1,778,000 செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரிசோதனையின் போது கணக்காய்வு திகதி வரையிலும் தற்போது மிகவும் சிறிய அளவான உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையும் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் 20 மெஷின்கள் வழங்கப்பட்டிருந்த | பதிலளிக்கப்படவில் லை. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தது டன் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதும் அந்த நலனாளிகளுக்கிடையே வழங்கப்பட்டிருந்த பத்திக் கைத்தொழில் டை இடுவதற்காக தேவையான பாத்தெப் சொந்தமாக காணப்பட்ட இரண்டு நலநாளிகளுக்கு மாத்திரமாக இருந்தமையால் முறையான ஆய்வு இன்றி செயற்திட்டம் திட்டமிடப்பட்டமையால் செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | பண்டாரகம பிரதேச செயலகத்தால் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிரயம் ரூபா 2,768,868 இனால் அமுல்படுத்தப்பட்ட ஒரு செயல்திட்டமாக இருந்த உற்பத்திக்காரர்களுக்காக தொடர்பு இணைப்பாளர் மற்றும் விற்பனை நிலையமொன்றுக்கான கட்டிடத்தை நிர்மாணித்து பூர்த்தி செய்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2024 நவம்பர் 19 ஆம் திகதி வரையிலும் உரிய எதிர்பார்க்கபட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும். |
| (iv) | பண்டாரகம பிரதேச செயலகத்தால் சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் அமல்படுத்தப்பட்ட சீமெந்து சார்ந்த உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்காக 72 நலனாளிகளுக்காக ரூபா 6,492,054 பெறுமதியான மலர் போச்சி அச்சுக்கள், தகரங்கள் மற்றும் GI குழாயும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அமுல்படுத்தப்பட்ட சௌபாக்கிய உற்பத்திக் கிராம | பதிலளிக்கப்பட வில்லை. | குறைவாக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை இனங்கண்டு ஆர்வம் காண்பிக்கின்றவர்களுக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் உபகரணங்கள் குறை பயன்படுத்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டத்தில் செயல்முன்னேற்றம் தொடர்பாக 20 நலநாளிகள் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்களப் பரிசோதனையின் போது 14 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,312,475 பெறுமதியான அந்த உபகரணங்கள் 2024 சனவரி 19 கணக்காய்வு திகதி வரையிலும் குறைவாக பயன்படுத்தும் நிலையில் காணப்பட்டது. நலநாளிகளின் தனியாள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. | | தரப்பினரிடம் விடயங்களை விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | புளத்சிங்கள பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி செய்வதன் கீழ் ரூபா 2,762,677 பெறுமதியான இயந்திரங்களை உள்ளடக்கிய உபகரணங்களை கையளிக்கும் போது முறையான உடன்படிக்கையின்றி அவை நலநாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. நலனாளிகளில் தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய உற்பத்திக் கைத்தொழில்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததா எனவும் அதன் மூலம் நலனாளிகளின் வாழ்வாதார வழிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக தொடர்ச்சியாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான எழுத்து மூல சான்றுகள் காணப்படவில்லை. உயர்ந்த பெறுமதியுடைய உற்பத்தி உபகரணங்கள் சங்கத்தின் பொது பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த உபகரணங்கள் பிரதேச செயலகத்தின் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கி சௌபாக்கிய | பதிலளிக்கப்பட வில்லை. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தது டன் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும். |

சங்கங்களுக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் உபகரணங்களை வழங்கும் போது அவ்வாறான முறைமை ஒன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

கூட்டுப்பசளை தயாரிக்கும் நிலையத்தின் தற்போதைய செயல் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது சேதனப் பசளை உற்பத்திக் கட்டடத்தில் எந்தவொரு பசளை உற்பத்தியும் மேற்கொள்ளப்படாதிருந்தமையின் சேதனப்பசளை அறைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த இயந்திரம் பயன்படுத்தி வெளியில் எடுத்து செல்லப்பட்டு அது பசளை அறைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இந்த இயந்திரமும் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாதிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. சேதனப் பசளை உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூறுகளாக்கும் இயந்திரம் இரண்டு ஒரு இயந்திரம் மாத்திரம் தற்போது கிடைத்துள்ளதுடன் அந்த இயந்திரமும் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கூட்டுப்பசளை தொடர்பான அறிக்கை எதுவும் சங்கத்திடம் காணப்படாதிருந்ததுடன் 2022 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் எந்தவொரு சேதனப்பசனை உற்பத்தியும் மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிரகாரம் நிர்மானிக்கப்பட்ட சேதனப்பசளை தயாரிக்கும் நிலையம் மற்றும் அந்த நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களும் $1\frac{1}{2}$ வருட காலத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (vi) | சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புளத்சிங்கள பிரதேச செயலகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த வேறொரு செயற்திட்டமான கருவா பயிர்செய்கை மேம்படுத்தவதற்கான நிகழ்ச்சித் திட்டம் நான்கின் (04) கீழ் ரூபா 7,621,997 செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையிலும் அதாவது 02 வருடங்களை மிஞ்சியிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்தவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட கருவா மேம்படுத்தும் சௌபாக்கிய சங்கம் புலத்சிங்கள பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ருக்கவில்லை. உரிய செயற்திட்டத்திற்காக நலநாளிகளின் தனிப்பட்ட பாவணைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,126,991 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய உற்பத்திக் கைத்தொழில்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக தொடரச்சியாக மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்த செயற்திட்டத்தின் கீழ் மேலும் இரண்டு நலனாளிகளுக்காக கருவா கன்று நாற்று மேடைகளை ஏற்படுத்தும் வகையில் ரூபா 86,075 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவ்வாறான நாற்று மேடைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும். |
| (vii) | மதுராவல பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருவா பயிர்ச் செய்கை மற்றும் உப உற்பத்திகளை விருத்தி செய்வதற்காக ரூபா 6,016,447 செலவிடப்பட்டிருந்ததுடன் கண்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது | 2023 அகஸ்ட் மாதத்தின் ஆரம்பம் வரையில் கருவா பட்டைகள் களற்ற முடியாமையின் அடிப்படையில் கருவா பட்டை வெட்டுதல் தற்காலிகமாக | சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் நடைமுறை ரீதியில் அமுல்படுத்த முடியுமான செயற்திட்ட முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட |

| | | |
|---|---|---|
| கருவா எண்ணெய் தயாரிக்கும் நடவடிக்கைகள் 2022 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டு 2022 டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் பிரதேச செயலகத்துடன் உடன்படிக்கையின் மூலம் தனியார் தரப்பினருக்கு கருவா எண்ணெய் உற்பத்தி நிலையத்தை பேணிச் செல்லும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து கணக்காய்வு திகதி வரை கருவா எண்ணெய் 14.5 போத்தல் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டமையால் 3.5 போத்தல் மாத்திரம் விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது. செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் கருவா சார்ந்த எதிர்பார்க்கப்பட்ட உப பயிர்ச்செய்கைகள் 05 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 02 உப உற்பத்திகள் மாத்திரம் சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் ஏனைய உற்பத்திகளுக்காக எந்த ஒருவரும் கணக்காய்வு திகதி வரையிலும் தொடர்பு பட்டிருக்கவில்லை. | நிறுத்தப்பட்டதுடன் கருவா பசளை மிகவும் அதிக விலையாக இருந்தமையால் சில கருவா விவசாயிகள் கருவா இலைகளை பசளைக்காக ஈடுபடுத்தியிருந்தனர். இதனால் கிடைக்கின்ற இலைகளின் அளவு குறைவடைந்திருந்தமை எதிர் காலத்தில் கருவா வெட்டும் காலம் வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலைகளின் அளவு பெறக்கூடியதாக இருந்தமையும் பசளைக்காக பயன்படுத்துவதற்காக மாற்று திட்டமொன்றை பயன்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வேண்டியிருந்ததுடன் காணப்படுகின்ற குறைபாடுகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுதல் வேண்டும். |

### 3.4 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கணிப்பிடல் வழுக்கள், மோசடியான செயற்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களின் அடிப்படையில் களுத்துறை மாவட்டத்தில் 08 பிரதேச செயலகங்களில் 35 ஓய்வூதிய தாரர்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,276,202 ஆகும். | பதிலளிக்கப்படவில்லை. | மேலதிக செலுத்துதல்கள் தாமதமின்றி அறவிட வேண்டியிருந்ததுடன் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக உரிய பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு விநியோகிக்கப்பட்ட 16 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2023 மே 06 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் ஆரம்ப முதல் 108 கணக்காய்வு ஐய வினாக்கள் காணப்பட்டதுடன் தற்போது 92 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதிலளிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி 16 ஐய வினாக்களுக்காக கூடிய விரைவில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக கால ரீதியில் பதிலளித்து உரிய சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களுத்தறை மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் முழுமையாக பாதிப்பிற்குட்பட்ட மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் அதிக ஆபத்தானதாக இருந்தமையால் அகற்றப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் வகையில் இடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் களுத்துறை மாவட்ட செயலகம் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு தொடர்பாக தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிரதேச நான்கு பிரதேச செயலகங்களில் 16 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 24,075,000 நலன் தொகையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் வீடுகளின் உரித்து உரிய நலனாளிகளின் பெயரில் கையளிப்பதற்கோ அல்லது கையேற்க பட்டமைக்கோ கணக்காய்வு திகதி வரையிலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இதன் கீழ் மேலும் மூன்று | பதிலளிக்கப்பட வில்லை. | நலனாளிகளுக்கு விடுவிக்கப்பட்ட பணம் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமை யை உறுதிப்படுத்துவதற் காக போதியளவான மேற்பார்வைகள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாத நிதி மீண்டும் அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேச செயலகங்களின் மூன்று (03) நலனாளிகளுக்கு ரூபா 4,600,000 செலுத்தப்பட்டிருந்த போதும் அந்த நலனாளிகளால் தங்களால் அரசாங்கத்தின் நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட வீடுகளுடன் காணி பின்னர் வேறு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 03 பிரதேச செயலகங்களில் 06 நலனாளிகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 9,500,000 நலன்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் மற்றும் வீடுகளின் உரித்து அந்த நலனாளியின் பெயரில் காணப்படவில்லை. | | |
| (ஆ) | இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆபத்திற்குட்பட்ட குடியிருப்பாளர்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வெலிப்பன்ன மௌன்ரிபல் காணியில் உத்தேசிக்கப்பட்ட வீதி அமைப்பதற்கும், குடிநீர் வழங்குவதற்குமாக 2021 டிசம்பர் 06 ஆம் திகதி மதுகம பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 900,000 நிதியேற்பாட்டின் மூலம் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக எந்தவொரு பெறுகை நடைமுறையும் பின்பற்றப்படாமல் மதுகம பிரதேச சபையுடன் 2021 டிசம்பர் 20 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த பணிகள் உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரமாக இல்லாதிருந்த போதிலும் மதுகம பிரதேச சபையின் தலைவரின் பெயரில் விநியோகிக்கப்பட்ட ரூபா 854,010 பெறுமதியான 2022 பெப்ரவரி 28 ஆம் திகதியில் காசோலை அத்திகதி முதல் 15 மாதம் கடக்கும் வரையிலும் பிரதேச செயலகத்தின் பொறுப்பில் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட | பதிலளிக்கப்படவில்லை. | உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்தாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து விடயங்களை விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தவறியிருந்தனர். | | |
| (இ) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2024 பெப்ரவரி 27 இல் உள்ளவாறு களுத்துறை மாவட்டத்தில் 09 பிரதேச செயலக பிரிவுகளில் காணப்பட்ட 65 கட்டடங்கள் எந்தவொரு பயன்பாடான பணிகளிலும் பயன்படுத்தப்படாமையினால் துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டிடங்களுக்கிடையே 26 கட்டிடங்களை உரித்து பிரதேச செயலகத்திற்கு சொந்தமாக காணப்பட்டது. இந்த கட்டிடங்களுக்கிடையே 19 கட்டிடங்கள் மீண்டும் பழுதுபார்க்கப்பட்டு நவீன மயப்படுத்தி பயனுள்ள பயன்பாட்டில் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. மிகுதி 39 கட்டிடங்களும் ஏனைய வெளி நிறுவனங்களுக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் அதில் 29 கட்டிடங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது பயன்படுத்திய பின்னர் மீண்டும் பயன்படுத்தக் கூடிய மட்டத்தில் காணப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | பயன்படுத்தக்கூடிய கட்டிடங்கள் தொடர்பாக தாமதமின்றி கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பாக 08 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது 07 பிரதேச செயலகங்களும் 2023 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக 31 கோவைகளின் அடிப்படையில் ரூபா 10,292,136 ஓய்வூதியமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் காணாமல் போனவை எப்போதும் அல்லது எந்த உத்தியோகத்தரின் பொறுப்பில் இருந்தபோது ஏற்பட்டது மற்றும் அவை காணாமல் போவதற்கான காரணங்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | ஓய்வூதிய கோவைகள் மற்றும் ஆவணங்களின் பராமரிப்பு தொடர்பாக போதியளவான தொழில் ரீதியான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தொடங்கொட பிரதேச செயலகத்தால் நீண்ட கால வாடகையின் கீழ் வழங்கப்பட்ட 3.6 ஹெக்டெயர் காணி ஒன்றுக்காக கையளிக்கப்பட்ட தனியார் கம்பனியிலிருந்து ரூபா 1,620,000 நிலுவை வாடகை தொகை மற்றும் தண்டப்பணமும் அறவிட வேண்டி இருந்ததுடன் 2006 நவம்பர் 10 ஆம் திகதி முதல் மேற்கூறப்பட்ட நீண்ட கால வாடகை உடன்படிக்கையின் நிபந்தனைகளினன் பிரகாரம் வாடகை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்தில் இந்த காணியில் மின்சார வலுக்கூடம் ஒன்று நிர்மானிக்க இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த போது அது தொடர்பாக பிரதேச செயலகத்தால் முன்னர் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>பின்னர் கால ரீதியில் இந்த காணி வாடகையாளரான தனியார் கம்பனியினால் காணி ஆணையாளர் நாயகத்தின் முன் அங்கீகாரமின்றி இன்னொரு கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக பிரதேச செயலளருக்கு அறிவித்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | அறவிடவேண்டிய வாடகை தொடர்பாகவும் உடன்படிக்கையின் நிபந்தனைகள் தொடர்பாகவும் போதியளவான ஆய்வு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் செய்ய வேண்டியிருந்ததுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 04 பிரதேச செயலகங்களினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்க வேண்டிய 129 காணிக் கூறுகளை கையளிக்கும் நடடிவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் 02 பிரதேச செயலகங்களுக்குரிய உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து கையளிக்கபட வேண்டிய 10 காணிக் கூறுகளை கையளிப்பதற்கும் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | கையேற்கப்பட வேண்டிய மற்றும் கையளிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பாக கால ரீதியில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 12 பிரதேச செயலகங்களுக்காக மீளாய்வாண்டில் முதியோர் படியாக செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட தொகை ரூபா 1,014,815,700 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் | 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி முதல் யூன் வரை அவ்வப்போது | முதியோர் படிகளுக்காக கிடைத்த நிதியேற்பாட்டை உச்ச அளவில் |

| | | | |
|---|---|---|---|
| | போது ஒரு பிரதேச செயலகத்தினால் செலுத்தப்படாத தொகை ரூபா 783,577,000 மாத்திரம் ஆனமையால் அந்த பிரதேச செயலகங்கள் மூலம் முதியோர் படியாக 2023 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்படாதிருந்த சேமிப்புத்தொகை ரூபா 231,238,700 ஆகும். அந்த தொகைகளில் எவ்வளவு அளவு 2024 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையிலும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது எனவும் மற்றும் 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய முதியோர் படிகளில் எவ்வளவு தொகை மிகை கட்டணமாக உள்ளது எனவும் கணக்காய்விற்கு அறிக்கை இடப்படவில்லை. | கொடுப்பனவு முறைமையில் மாற்றப்பட்டமையினால் நலனாளிகள் அதிக வசதியீனத்திற்கு உட்பட்டிருந்ததுடன் பணம் பெற்றது எந்த அலுவலகத்தின் மூலம் எனவும் ஒரே தடவையில் விளங்கிக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமையால் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு செல்லாமையின் காரணமாக பணம் மிகைக் கட்டணமாக இருந்தது. அவ்வாறு மாதத்திற்கு உரிய படிதொகையின் உரித்துரைத்த திகதியின் போது செலுத்த முடியமையினால் தபால் அலுவலகத்தில் பணம் சேமிக்க மிகுதியாக இருந்தது. | உரிய நலனாளிகளுக்கு வழங்குவதற்கு தேவையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | 14 பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்த 6766 காணிக்கூறுகளாக இருந்த போதும் மீளாய்வாண்டில் 11 பிரதேச செயலகங்களினால் 137 காணி கச்சேரிகள் நடாத்தப்பட்டு அனுமதியற்ற 956 காணிக் கூறுகள் மாத்திரம் ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டிருந்தது. | 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மதுகம பிரதேச செயலகத்தில் 05 காணிக் கச்சேரிகளும், பாணந்துறை பிரதேசத்தில் 01 உம் அகலவத்த பிரதேச செயலகத்தில் 05 உம் ஆக | குறித்துரைத்த பிரகாரம் காணிக் கச்சேரிகள் நடாத்துதல் மற்றும் அனுமதியற்ற காணிகளை ஒழுங்குமுறைப்படுத்துதலை நாளது வரையாக மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணிக்கச்சேரிகள் நடாத்தி காணிகளை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பூர்த்தி செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | சனாதிபதி செயலக செலவினத் தலைப்பின் கீழ் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த வறுமையை ஒழிக்கும் நோக்கில் முன்னரே மேற்கொள்ளப்பட்ட கிராம சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 09 பிரதேச செயலகப் பிரிவுகளில் 103 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அதில் 80 சங்கங்கள் அதாவது 78 சதவீதம் செயலிழந்து காணப்பட்டமையால் அத்திகதியில் அந்த சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் மீதியாக காணப்பட்ட ரூபா 28,323,210 தொகை குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 05 பிரதேச செயலக பிரிவுகளில் அதன் செயற்படு நிலையில் காணப்பட்ட சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சுய தொழில் வாய்ப்பு கடன்களுக்கு இடையில் ரூபா 2,285,874 தொகையும் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் செயலிழந்த கடனாக காணப்பட்டது. | பதிலளிக்கப்பட வில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஒ) | பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித் திட்டம் - கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித் திட்டம் 2017 இன் கீழ் | பதிலளிக்கப்படவில்லை. | உரிய செயல்திட்டங்களை அமுல்படுத்தாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த |

| | |
|---|---|
| பேருவல பிரதேச செயலகத்தில் நீர் செயல்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக 2018 சனவரி 30 ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு ரூபா 1,710,759 பெறுமதியான காசோலை விநியோகிக்கப் பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 28 ஆம் திகதி வரை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் உரிய செயற்திட்டம் நிறைவேற்றப் படாமல் அந்த பணம் சபையின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் வரிக்காக ரூபா 223,142 தொகையும் அறவிடப்பட்டு மிகுதித் தொகையாக ரூபா 1,487,617 மாத்திரம் மீள பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப திட்டங்களை தயாரித்தல் மற்றும் மேற்பார்வை செயற்றிறனின்மையின் காரணமாக அரசாங்கத்தால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக முன்னுரிமை வழங்கி ஈடுபடுத்துவதற்கு வழங்கப்பட்ட பணம் ரூபா 1,710,759 உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்தாமையின் காரணமாக 05 வருடங்களுக்கு அண்மித்த காலம் பயனற்று காணப்பட்டது. | உத்தியோகத்தர்கள ிடம் விடயங்களை விசாரணை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தால் 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 17 நோக்கங்களின் கீழ் அபிவிருத்தி செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் இலக்கம் 02 மற்றும் இலக்கம் 09 இற்காக மாத்திரம் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் பௌதிக செயல்முன்னேற்றம் நூறு சதவீதமாக (100%) இருந்தமை | கொவிட் தொற்று நோய் நிலமை நாட்டில் எழுந்திருந்த பொருளாதார நெருக்கடி நிலமையின் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல் வீழ்ச்சி அடைந்திருந்ததுடன் அபிவிருத்தி செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக அந்தந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பான | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| காண்பிக்கப்ட்டிருந்தது. எனினும் இந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக அந்தந்த அபிவிருத்தி செயற்பாடுகளில் வெற்றியீட்டிய குறிகாட்களை எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் ஆண்டில் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளுதல் ஒப்பீட்டு ரீதியில் அளவிடக் கூடிய குறித்துரைத்த குறிகாட்டிகளாக (KPI) கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையின் காரணமாக இலக்கை அடைந்து கொள்ளும் செயலாற்றலை கணக்காய்வில் குறிப்பாக அளவிட முடியாதிருந்தது. | செயல் முன்னேற்றம், பிரதேச செயலகத்தின் மூலம் அளவிடக் கூடிய குறிகாட்டிகளாக அல்லாமல் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்திட்ட எண்ணிக்கையின் பிரகாரம் தொடர்புபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர் காலத்தின் போது குறிகாட்டிகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் ஆண்டின் இலக்ககளை அடைந்து கொள்ளல் ஒப்பீட்டு ரீதியில் சமர்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொது மக்கள் அதிக அளவில் வருகை தருகின்ற நிறுவனங்களில் ஆக கூடிய கேள்வியாக உள்ள சேவைகளுக்கான செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காணல் மற்றும் அவற்றை நிறைவேற்றும் அளவினை அளவிடுவதற்காக சுற்றறிக்கை மூலம் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆலோசனையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் மூலம் 2023 ஆம் ஆண்டில் பொது மக்களால் பிரதேச செயலகத்திற்கு அதிக அளவில் கடமைகளை நிறைவேற்றும் நோக்கு எதிர்பார்க்கை வருகை தருகின்ற சேவைகளுக்கு இடையே ஆகக் கூடிய கோரிக்கையாக இருந்த 05 சேவைகள் இனங்காணப்பட்டு | தெரிவு செய்யப்பட்ட 05 குறிகாட்டிகள் அரசாங்கத்தின் காணிகளுக்காக குறுங்காலம் மற்றும் நீண்ட கால வாடகை அறவிடல் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை பரீட்சித்தல் போன்ற குறிகாட்டிகள் குறைந்த பொது மக்கள் வருகை தருவதாக காண்பித்த குறிகாட்டிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டில் இரண்டாவது காலாண்டு முதல் | பொது மக்களுக்கு அதிக சேவைகளை நிறைவேற்றக்கூடிய சரியான செயலாற்றல் குறிகாட்டிகளை இனங்காண வேண்டியிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயல் முன்னேற்றம் தொடர்பாக போதியளவான தகவல்கள் மதிப்பீட்டில் மேற்கொள்ளக்கூடிய பிரகாரம் குறித்துரைத்த காலப்பகுதியில் |

அதற்காக உரிய இலக்குகள் பிரதேச செயலகத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தெளிவாக பொதுமக்களுக்கு அதிக அளவில் கடமைகளை நிறைவேற்றும் எதிர் பார்க்கை வருகை தருகின்ற சேவைகளை இனங்கண்டு அதில் ஆகக் கூடிய கோரிக்கை உள்ள சேவைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் அரசாங்கத்தின் காணிகளுக்காக குறுங்கால மற்றும் நீண்ட கால வாடகை அறவிடல் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை பரீட்சித்தல் போன்றவை 2023 ஆம் ஆண்டில் செயலாற்றல் குறிகாட்டியாக இனங்காணப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பொது மக்களுக்கு சேவை இலக்குகளை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றம் காலாண்டு ரீதியில் குறித்துரைத்த திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் அமைச்சுக்கு அனுப்பப்படாதிருந்ததுடன் அந்த காலாண்டு அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கலந்துரையாடலின் போதும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் மாவட்ட செயலகம் சமர்பித்த காலாண்டு ரீதியான செயல்முன்னேற்ற அறிக்கையில் காலாண்டில் இலக்கை அடைந்து கொள்ளல் 25 சதவீதத்தை விட குறைந்த சந்தர்ப்பங்களில் அதற்கு தாக்கமளித்த காரணங்கள் மற்றும் மிகுதி காலத்தில் உரிய அந்த செயல்முன்னேற்றங்களை குறைவதை சரிசெய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அந்த குறிகாட்டிகளை அனுமதியற்ற காணிகளுக்காக முறையான அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக உடனடியான நிவாரணங்களை வழங்குதலாக திருத்துவதற்காக செயலாளர் அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த குறிகாட்டிகள் 2024 இன் இரண்டாவது காலாண்டு முதல் அமுல்படுத்தப்படும்.

பதவி அணியினரில் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் மற்றும் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி என்பன 06 மாதங்களுக்கு அண்மித்த காலம் வெற்றிடமாக காணப்பட்டமையால் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகளில் செயல் முன்னேற்றலை சமர்பித்தல் தாமதமாக இருந்ததுடன் 2024 இன் இரண்டாவது காலாண்டு முதல் மாவட்ட கணக்காய்வு முகாமைத்தவ குழுவின் போது உரிய இலக்கை அடைந்து கொள்ளலின் செயல் முன்னேற்றம்

காலாண்டு செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அந்த அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கும் சமர்பிக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | தொடர்பாக இந்த அறிக்கை கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மகளிர் சிறுவர் அலுவல்கள், சமுதாய வலுவூட்டல் அமைச்சின் ஆரம்ப சிறுவர் அபிவிருத்தி நிலையம்/ முன்பள்ளிப் பாடசாலை சிறுவர்களுக்காக காலை உணவினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2023 மே 16 ஆம் திகதி முதல் பொது திறைசேரி நிதியேற்பாட்டின் கீழ் அமுல்படுத்தவதற்காக மதுராவெல பிரதேச செயலகத்திற்கு ரூபா 3,106,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 நவம்பர் 28 கணக்காய்வு திகதி வரையிலும் ஒரு பிரதேச சபை முன்பள்ளிப் பாடசாலையின் 43 பிள்ளைகளுக்காக காலை உணவு வழங்குவதற்காக ரூபா 56,760 மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் குறித்துரைத்த நேரத்தில் கட்டுநிதி கிடைக்காமையினால் வழங்குனர்கள் முன்பள்ளிப் பாடசாலைகளுக்காக உணவு வழங்குதலை நிராகரித்தமையின் காரணமாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கட்டுநிதி கிடைப்பனவில் தாமதம் மற்றும் ஒரு பிள்ளைக்கு ரூபா 60 தொகையில் உணவு வழங்குதல் வசதியீனத்தின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | உத்தேசிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை குறித்துரைத்த கால எல்லையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கொவிட் 19 தொற்று நோயின் தாக்கம், இரசாயன பசளை நெருக்கடி மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் கணிசமான அளவில் பாதிப்புக்குட்பட்ட விவசாய மக்களுக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாவும் நலன்களை வழங்குவதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் உணவு பாதுகாப்பினை | இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்ட போதும் உரிய காலத்தில் பூர்த்தி செய்ய முடியாதிருந்ததாக உத்தியோகத்தர்கள் அறிவித்திருந்ததுடன் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த | வெளிநாட்டு நிதி உதவியை பெற்று செயற்திட்டங்களை குறித்துரைத்த காலத்தில் அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்துரைத்த கால எல்லையில் நிறைவேற்றுவதற்கு பொறுப்பு வாய்ந்த |

உறுதிப்படுத்துவதற்காகவும் உதவியினை பெற்றுக் கொள்வதற்கு உலக வங்கி உதவியின் கீழ் காலநிலை தாக்கங்களை குறைக்கும் பல கட்ட நிகழ்ச்சித்திட்டம் (CRes MPA) மற்றும் ஒன்றிணைந்த நீர் வழங்கல் முகாமைத்துவ செயற்திட்டத்தை அமுல்படுத்தும் ஆலோசனையை உள்ளடக்கி சகல பிரதேச செயலாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் 18 மாத காலத்தில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தமையும் விரைவாக மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டியிருந்தமையும் ஆரம்ப விசாரணை அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட செயலாளரால் மேலும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் மதுராவல பிரதேச செயலகத்தால் அவ்வாறு ஆரம்ப விசாரணை அறிக்கை (PIR) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த உலக வங்கி செயற்திட்டத்தில் கால எல்லையில் அமுல்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்துரைத்த கால எல்லையில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் நிறைவேற்றாமையின் காரணமாக உரிய செயற்திட்டத்தில் பிரதேச ரீதியில் பெறக்கூடியதாக இருந்த நேரடி மற்றும் உடனடி நலன்களை பெற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் முடியாதிருந்தது.

காரணத்தால் இது தொடர்பாக ஆரம்ப விசாரணை அறிக்கை (PIR) தயாரிக்கப்படாதிருந்தது.

அதிகார தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 5.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆம் திகதியில் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் மனித வள திட்டமிடலில் பதவியணியினரில் ஒவ்வொரு அங்கத்தவருக்காகவும் வருடமொன்றிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் உறுதிப்படுத்தபட வேண்டிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தில் 2023 பயிற்சி திட்டத்தில் அலுவலக உதவியாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்காக எந்வொரு பயிற்சி சந்தர்ப்பமும் திட்டமிடப்பட்டிருக்க வில்லை. | அலுவலக ஊழியர் சேவையில் உத்தியோகத்தர்களுக்காக 2023 அம் ஆண்டின் போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போது ஏற்பட்ட குறைபாடுகளை மாற்றி அமைக்கும் வகையில் 2024 இன் முதல் காலாண்டின் போது மாவட்டத்தின் சகல அலுவலக ஊழியர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக 02 நாட்கள் பயிற்சி செயலமர்வு ஒன்று 02 கட்டங்களின் கீழ் வெற்றிகரமாக நடாத்தப்பட்டிருந்தது. கிராம உத்தியோகத்தர்களுக்காக சில தினங்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த அலுவலகத்தில் நடாத்துதல் நடைமுறையில் வசதியீனமான செயற்பாடாக இருந்தமையால் அந்த உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு தேவையான நிதியேற்பாடு பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. | மனிதவள திட்டத்தின் பிரகாரம் பதவியணியினரின் ஒவ்வொரு அங்கத்தவருக்காக வும் பயிற்சி சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சித் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் எட்டு (08) பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் காணப்பட்ட 94 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | கிராம உத்தியோகத்தர் வெற்றிடம் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளும் போது அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர காணப்படுகின்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு உரிய | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினருக்கு இணங்கும் வகையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிகள் மேலதிக உத்தியோகத்தர்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. | |
| (இ) | ஒன்றிணைந்த சேவைகளின் உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த இடம் மாற்றல் கொள்கையின் பிரகாரம் ஒரு சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இடம் மாற்றத்தின் கீழ் வருகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 07 பிரதேச செயலகங்களிலும் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு சேவைக் காலம் 05 வருடங்களை விஞ்சிய 210 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | 2024 இன் உள்ளக வருடாந்த இடமாற்றங்களின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை, முகாமைத்துவ சேவை, உத்தியோகத்தர்களின் சேவை, ஒன்றிணைந்த சாரதிகள் சேவை, அலுவலக ஊழியர் சேவை போன்ற சேவைகளில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துடன் உத்தியோகத்தர்கள் அதிக அளவில் சேவையின் தேவை, உத்தியோகத்தர்களின் கோரிக்கை மற்றும் ஒரு நிலையத்தில் சேவைக் காலம் என்ற விடயங்களை கவனத்திற் கொண்டு இடம் மாற்றலை மேற்கொண்டு அந்த இடம் மாற்றங்கள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. மேலும் 2025 ஆம் ஆண்டில் மேலதிக சேவைக் காலத்துடன் உத்தியோகத்தர்கள் இடம் மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இடம் மாற்றல் கொள்கையின் பிரகாரம் இடம் மாற்றல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | பிரதேச செயலகங்களில் அநேகமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விஞ்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எட்டு (08) பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட | அரச நிர்வாக அமைச்சிலிருந்து கிடைத்த ஆலோசனையின் அடிப்படையில் களுத்துறை மாவட்ட செயலகத்திற்கு பயிற்சிக்காக பட்டதாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வப்போது அமுல்படும் வகையில் நிரந்தர நியமனங்களும் வழங்கப்பட்டுவதுடன் அதன்போது நியமிக்கப்பட்ட | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு இணங்க பதவிகளை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் இல்லையாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரை திருத்துவதற்கு நடவடிக்கை |

செயலகத்தில் மாத்திரம் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி சேவையில் ஈடுபட்டிருந்த மிகை அபிவிருத்தி உத்தியோகத்தர் எண்ணிக்கை 99 ஆகும்.

உத்தியோகத்தர்களுக்கிடையே ய மிகையாக 99 உத்தியோகத்தர்கள் இருந்தமையும் தற்போது அந்த உத்தியோகத்தர்கள் யாவருக்கும் முறையான பிரகாரம் கடமைகள் கையளித்து அவர்களால் அந்த கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது.

எடுத்தல் வேண்டும்.